**சார்பு நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திருமதி S.** மும்தாஜ்**., B.Sc.,B.L.,**

சார்பு நீதிபதி, சீர்காழி

*******

2023–ம் ஆண்டு மார்ச் மாதம் 21–ம்நாள் செவ்வாய்க்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 174/2022**

**(மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண். 398/2021)**

**CNR No. TNNGOA0016582021**

சின்னதுரை ...வாதி

....எதிர்.....

1. மாடசாமி என்கின்ற கோவிந்தசாமி
2. பத்மாவதி
3. அலெக்ஸ்பாண்டியன் ...பிரதிவாதிகள்

இவ்வழக்கு மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 398/2021 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு மாண்புமிகு நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தின் 08.11.2022ம் தேதியிட்ட A.No.332/22 உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அசல் வழக்கு எண்.174/2022 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 06.03.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதிதரப்பில் வழக்கறிஞர் திரு. சௌ. சிவச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1முதல் 3 பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் 18.03.2022–ம் தேதியன்று மயிலாடுதுறை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் 1முதல் 3 பிரதிவாதிகளை அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் ஒருதலைப்பாளர்களாக்கப்பட்டும் வாதி தரப்பு வாதுரை, சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

1. இவ் வழக்கானது நீதிமன்றம் குறிப்பிடும் காலக்கெடுவிற்குள் பிரதிவாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து வரும் கூரைவீட்டினை காலி செய்து வாதிவசம் ஒப்படைக்க வேண்டுமென சுவாதீன மீட்பு பரிகாரம் கோரியும் செலவுத்தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதியின் வழக்குரைச் சுருக்கம்**

இவ்வழக்கு தாவா சொத்து மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா,

திருவெண்காடு கிராமம், உட்கடை உட்கிராமத்தில் உள்ள அருள்மிகு சுவேதாரண்யேவரா்சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான புஞ்சை நிலமாகும். 1–ம் பிரதிவாதி வாதியின் சித்தப்பா துளசி படையாச்சியின் இளைய சகோதரா். 2–ம் பிரதிவாதி 1–ம் பிரதிவாதியின் மனைவி. 3–ம் பிரதிவாதி 1,2 பிரதிவாதிகளின் மகன். தாவா சொத்து வாதியின் தகப்பனாரான சுப்பையா படையாச்சியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து அவா் ஆண்டனுபவித்து வந்து அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகளான திருவேங்கடம், சுப்பிரமணியன் மற்றும் சின்னதுரை ஆகியோரின் பொது அனுபவத்தில் ஆண்டனுபவித்து வந்த சொத்தாகும். தாவா சொத்தினை சுப்பையா படையாச்சியின் மூத்த மகனான திருவேங்கடம் திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் நிா்வாக அதிகாரிக்கு 05.08.1991 அன்று மறு குத்தகை பத்திரம் எழுதிக்கொடுத்து அதுமுதல் அவா் ஆண்டு அனுபவித்து வந்தாா். அதன்பின்னா் சுப்பையா படையாச்சியின் மகன்கள் திருவேங்கடம், சுப்பிரமணியன், சின்னதுரை ஆகியோா்களுக்கிடைய ஏற்பட்ட பாகப்பிரிவினையின்படி தாவா சொத்து வாதிக்கு கிடைத்து அது முதல் வாதியின் வசத்திலும், அனுபவித்திலும் இருந்து வந்தது. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளதாக அதன் உரிமையாளரான திருக்கோயிலின் செயல் அலுவலா் 25.09.2019ம் தேதியன்று சான்று வழங்கியுள்ளாா். தாவா சொத்தினை வாதி நிராட்சேபணையாய் சா்வ சுதந்திர பாத்தியங்களுடன் ஆண்டனுபவித்து வருகிறாா். கடந்த 20 வருடங்களுக்கு முன்பு வாதியின் சித்தப்பாவான துளசி படையாச்சி அவருக்கு வீடு எதுவும் இல்லையென்றும், அதனால் தாவா சொத்தின் ஒரு பகுதியில் உள்ள கூரை வீட்டில் சிறிது காலம் தங்கிக்கொள்வதாகவும், சிறிது காலத்தில் வேறு இடம் பாா்த்து சென்றுவிடுவதாகவும் கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதி வாதியின் சகோதரரான திருவேங்கடத்தின் அனுமதி பெற்று 1–ம் பிரதிவாதியின் தாய் தந்தையரான துளசி படையாச்சியையும், அவரது மனைவியான ஜெயலெட்சுமியையும் தாவா சொத்தின் ஒரு பகுதியில் உள்ள கூரை வீட்டில் குடியிருந்து வர அனுமதி அளித்துள்ளாா். எனவே பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள கூரை வீட்டில் வாதியின் அனுமதி பெற்ற (Permissive Occupier) ஆவாா்கள். அதைத் தவிர பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித தனிப்பட்ட உரிமையோ, பாத்தியமோ கிடையாது. தாவா சொத்தில் குடியிருக்க வாதி பிரதிவாதிகளுக்கு கொடுத்த அனுமதியை 09.11.2021ம் தேதியிட்ட வழக்கறிஞா் அறிவிப்பு மூலம் ரத்து செய்துள்ளாா். அந்த அறிவிப்பில் வாதி பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள வீட்டில் இருந்து 15 தினங்களகு்குள் காலி செய்து வாதி வசம் விடவேண்டும் என்று கேட்டுள்ளாா். அந்த அறிவிப்பினை 24.11.2021 அன்று பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் தாவா சொத்தில் பிரதிவாதிகள் வசிக்கும் கூரை வீட்டினை காலி செய்து வாதி வசம் ஒப்படைக்காமல் வாதியுடன்

வீண் தகராறுகள் செய்து மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு மிரட்டிய காரணத்தினால் வாதி 24.11.2021 அன்று திருவெண்காடு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். எனவே இந்த வழக்கினை தாவாச்சொத்தினை பிரதிவாதிகள் வாதி வசம் ஒப்படைக்க வேண்டுமென சுவாதீனமீட்பு பாிகாரம் கோாி வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி வழக்கில் கோாியுள்ளபடி தாவா செலவுத்தொகையுடன் தீா்ப்பாக வேண்டும்.

3. இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணை சாா்வு செய்யப்பட்டும் 18.03.2022 அன்று பிரதிவாதிகளை மயிலாடுதுறை கூடுதல் சாா்பு நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜாின்மையால் ஒருதலைப்பாளராக்கப்பட்டுள்ளனர்.

4. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி சின்னதுரை வா.சா.1 ஆக விசாாிக்கப்பட்டுள்ளாா். மற்றொரு தனி நபா் சாட்சியான இளஞ்செழியன் என்பவா் வா.சா.2 ஆக விசாாிக்கப்பட்டுள்ளாா். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் இல்லை. பிரதிவாதிகள் இவ்வழக்கில் ஒருதலைப்பாளா்களாக உள்ளனா்.

5. **<u>இவ்வழக்கில் தீா்வுக்குாிய பிரச்சனை</u>**

வாதி இவ்வழக்கில் கோாியுள்ள பாிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6. **<u>தீா்வு</u>**

தாவா சொத்தில் பிரதிவாதிகள் குடியிருந்துவரும் கூரை வீட்டினை காலி செய்து வாதியின் வசம் ஒப்படைக்கக் கோாி இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு வழக்கானது தாவா சொத்து அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரசுாமி திருக்கோயிலுக்கு பாத்தியப்பட்டது என்றும், வாதியின் தந்தை சுப்பையா படையாச்சி தாவா சொத்தை அனுபவித்து வந்து அவருக்குப் பிறகு வாதி மற்றும் அவருடைய சகோதரா்கள் குத்தகை சுவாதீன அனுபவம் செய்துவந்து, வாதியின் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிாிவினையில் தாவா சொத்தின் குத்தகை அனுபவ பாத்தியம் வாதிக்கு ஒதுக்கப்பட்டதாகவும், அருள்மிகு சுவேதாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயிலின் நிா்வாக அதிகாாி வாதியின் சகோதரா் திருவேங்கடம் என்பவருக்கு 05.08.1991ம் தேதியன்று மறு குத்தகை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளதாகவும், 1–ம் பிரதிவாதியின் தந்தை வாதியின் சித்தப்பா என்றும், அவா்கள் தாவா சொத்தில் உள்ள கூரை வீட்டில் குடியிருந்துவர அனுமதி கேட்டு வாதி மற்றும் அவரது சகோதரா்களின் சம்மதத்துடன் முதல் பிரதிவாதியின் பெற்றோா் அனுமதி பெற்ற அனுபவதாரா் என்ற முறையில் வசம் கொண்டு இருந்து வந்ததாகவும், அவா்களுக்குப்பிறகு பிரதிவாதிகள் குடியிருந்து வருவதாகவும், தாவா சொத்து வாதிக்கு தேவைப்பட்டதால் தாவாச் சொத்தில் உள்ள கூரை

வீட்டினை காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்கக் கோரி 09.11.2021ம் தேதியில் வாதி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞா் அறிவிப்புக் கொடுத்தும் காலி செய்யாததால் தாவா சொத்தின் சுவாதீனம் கோரி இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்களை பாிசீலனை செய்கையில் வா.சா.ஆ.1 ஆனது 05.08.1991ம் தேதியிட்ட குத்தகை பத்திரமானது அருள்மிகு சுவேதாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயிலின்நிா்வாக அதிகாாியால் வாதியின் சகோதரா் திருவேங்கடத்திற்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் வாதி தரப்பில் விசாாிக்கப்பட்ட வா.சா.2 தாவா சொத்தின் குத்தகை பாத்தியம் வாதியின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு வாதி தாவா சொத்தை அனுபவித்து வருவதாக குறிப்பிட்டும், பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதியின் அனுமதியின் போில் சுவாதீனம் கொண்டுள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளாா். வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.5 சான்றாவணங்களான வழக்கறிஞா் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ஒப்புதல் அட்டைகளை பாிசீலனை செய்கையில் தாவா சொத்தின் சுவாதீனம் கோரி பிரதிவாதிகளுக்கு வாதி அறிவிப்பு கொடுத்து அந்த அறிவிப்பு பிரதிவாதிகளுக்கு சாா்வு செய்யப்பட்டுள்ளது தொியவருகிறது.

8. இவ்வழக்கில் பிரதிவாதிகள் நீதிமன்ற அழைப்பாணையையை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைப்பாளா்களாக்கப்பட்டுள்ளனா். வாதி தரப்பு வாய்மொழி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பாிசீலனை செய்கையில் தாவாச்சொத்து அருள்மிகு சுவேதாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு பாத்தியப்பட்டு வாதியின் சகோதரா் வா.சா.ஆ.1 ஆவணத்தின்மூலம் குத்தகைப்பத்திர ஆவணம் எழுதி பெற்றுள்ளதும், வாதியின் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிாிவினையில் தாவாச்சொத்தின் குத்தகை அனுபவ பாத்தியம் வாதிக்கு ஒதுக்கப்பட்டதும் தொியவருகிறது. மேலும் பிரதிவாதிகள் வாதியின் வழக்குரை சங்கதிகளை மறுத்துரைக்க முன்வராமல் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஒருதலைப்பாளா்களாக உள்ளனா். எனவே தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் வழக்குரை சங்கதிகளை வாதி நிரூபித்துள்ளதால், வழக்கில் கோாியபடி தாவா சொத்தின் சுவாதீனம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்து அவ்வாறு இவ்வழக்கின் பிரச்சினைக்கு தீா்வு காணப்படுகிறது.

9. முடிவாக பிரதிவாதிகள் இரண்டு மாத காலத்திற்குள் தாவாச்சொத்தில் குடியிருந்துவரும் கூரைவீட்டினை காலி செய்து வாதியின் வசம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டுமென்று தீா்ப்பும், தீா்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீா்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சாிபாா்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2023–ம் ஆண்டு மாா்ச் மாதம் 21 –ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S MUMTAJ Digitally signed by S MUMTAJ

சாா்பு நீதிபதி,
சீா்காழி.

**பின் இணைப்பு**

**வாதி தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 திரு சின்னதுரை ( வாதி )
வா.சா.2 திரு இளஞ்செழியன்

**வாதிதரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 05–08–1991 | சுவேதாரண்யேஸ்வரசுாமி தேவஸ்தானத்தின் நிா்வாக அதிகாாி திருவேங்கடம் என்பவருக்கு எழுதிக்கொடுத்த குத்தகைப்பத்திரத்தின் அசல் |
| வா.சா.ஆ.2 | 09.11.2021 | வாதி வழக்கறிஞா்மூலம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | – | வாதி அனுப்பிய அறிவிப்பை 1–ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையின் அசல் |
| வா.சா.ஆ.4 | – | வாதி அனுப்பிய அறிவிப்பை 2–ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையின் அசல் |
| வா.சா.ஆ.5 | – | வாதி அனுப்பிய அறிவிப்பை 3–ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டையின் அசல் |
| வா.சா.ஆ.6 | – | வாதியின் ஆதாா் அடையாள அட்டையின் அசலுடன் ஒப்புமை செய்யப்பட்ட நகல் |

S MUMTAJ Digitally signed by S MUMTAJ

சாா்பு நீதிபதி, சீா்காழி.

நோிய/வரைவு தீா்ப்புரை
அசல் வழக்கு எண்.174/2022
நாள் : 21.03.2023